# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.187/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 13 ( PW– 13 )** |
| **பெயர்** | :– | **வினோத் குமார்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **கோவிந்தன்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01–ஆம், 04–ஆம், 08–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 03–ஆம், 05–ஆம், 07–ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் மேட்டூர் R.S பகுதியில் மால்கோ தொழிற்சாலைக்கு எதிரில் வசிக்கிறேன். JSW தொழிற்சாலையில் ஒப்பந்த தொழிலாளராக வேலை செய்கிறேன். 19.12.2017-ஆம் தேதியன்று மதியம் 01.30 மணியளவில் காவேரி Cross-க்கு பக்கத்தில் உள்ள இந்துஸ்தான் தாபாவில் நானும் செல்வகணபதியும் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்போது Car வரும் சத்தம் கேட்டது. சற்று நேரத்தில் அலறல் சத்தம் கேட்டது. நானும் செல்வகணபதியும் நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த குடிலை விட்டு வெளியே ஓடிவந்து பார்த்தோம். 06 நபர்கள் ஒருவரை வெட்டிக்கொண்டு இருந்தனர். வெட்டுப்பட்டவர் சமையல்கட்டுவை நோக்கி ஓடினார். சமையல்கட்டு படிக்கட்டில் சரிந்து விழுந்துவிட்டார். ஏற்கனவே சொன்ன 06 நபர்கள் அவரை மீண்டும் வெட்டினர். பிறகு அவர்கள் வந்த Car-ல் ஏறி தாபாவை விட்டு வெளியே சென்றனர். Car பவானி நோக்கி சென்றது. வந்த Car கருப்பு நிறம் கொண்டது. Maruti நிறுவன Car. சிறிய ரக Car தான் அது.

நானும் செல்வகணபதியும் வெட்டுபட்டவர் கிடந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். அவர் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். தலையில் வெட்டுப்பட்ட ஒருவர் இறந்தவர் கிடந்த இடத்திற்கு வந்தார். அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். நானும் அமிர்தராஜிம் சாப்பிடுவதற்கு வந்தோம் என்றும் அமிர்தராஜிக்கும் ஸ்டாலின் என்பவருக்கும் முன் -விரோதம் இருந்தது என்றும் அதனால் ஸ்டாலின் ஆட்களை வைத்து வெட்டிவிட்டார் என்றும் சொன்னார்.

வெட்டியவர்களில் மூவரை அவர்கள் Car-ல் ஏற சென்றபோது பார்த்தோம். 01-ஆம் எதிரி ஸ்டாலினை சான்றாளர் அடையாளம் காட்டி அவரை அங்கு பார்த்தாகவும் மற்ற இருவர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை எனவும் கூறினார். (தற்போது நீதிமன்றத்தில் 01-ஆம், 04-ஆம், 08-ஆம் எதிரிகள் மட்டும் தோன்றியிருந்தனர்.) காவல் துறையினர் என்னை விசாரித்தனர். நான் நடந்ததை சொன்னேன்.

மேட்டூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் சொன்னேன். சுமார் 03 அல்லது 04 நாட்கள் கழித்து சொன்னேன். அந்த வாக்குமூலம்தான் என்னிடம் காட்டடப்படும் ஆவணம். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ–05** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சம்பவம் நடந்ததில் இருந்து ஒரு வாரம் கழித்து சேலம் மத்திய சிறைச் -சாலைக்கு நான், செல்வகணபதி, காவல் துறையினர் சென்றோம். அங்கு வரிசையாக ஆட்களை நிறுத்தி வைத்திருந்தனர். கருப்பு அங்கி அணிந்த ஒருவர் இருந்தார். அவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. அங்கு வரிசையாக நின்றவர்களில் தாபாவில் கொலை நடந்த இடத்தில் யாரை -யாவது பார்த்தீர்களா என்று கேட்டனர். பார்த்தவரை தொட்டு காட்டுமாறு சொன்னார்கள். நான் மூவரை தொட்டுக் காட்டினேன். அவர்களின் பெயர் எனக்குத் தெரியாது. நான் தொட்டுக் காட்டிய யாரும் இங்கு இல்லை. மூன்று முறை அவ்வாறு அடையாளம் காட்டினேன். இதுச் சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை**

நான் ITI Fitter படித்துள்ளேன். என் தாயார் பெயர் பாக்கியம், தகப்பனார் பெயர் கோவிந்தன் என்றால் சரிதான். என் தாயாரின் சகோதரர் வெங்கடாசலம் எங்கள் ஊரை சேர்ந்தவர்தான். வெங்கடாசலம் மகன்தான் அமிர்தராஜ் என்றால் தெரியாது. அவர் எனக்கு சொந்த தாய்மாமன் மகன் என்றும் அவரை தெரியாது என்று வேண்டும் என்றே பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

இறந்துபோன அமிர்தராஜ் எனக்கு மாப்பிள்ளை முறை என்றால் எனக்குத் தெரியவில்லை. என் அம்மாவிற்கு ஜெயபால் என்ற மற்றொரு சகோதரர் உள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. நானும் என் தாயாரும் ஒன்றாகதான் வசிக்கிறோம் என்றால் சரிதான். அமிர்தராஜின் சடலத்தை எத்தனை மணிக்கு அடக்கம் செய்தனர் என்றால் அடக்கம் செய்தபோது நான் இல்லை.

மேட்டூரில் PN பட்டி பகுதிக்கும் மால்கோ பகுதிக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 02 கி.மீ தூரம் இருக்கும். ராமன்நகருக்கும் PN பட்டி ஊருக்கும் சுமார் 04 கி.மீ தூரம் இருக்கும். அன்று நானும் செல்வகணபதியும் ஒன்றாக வந்து ஒன்றாக திரும்பி சென்றோம் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்து முடிந்து சுமார் 02.00 மணியளவில் காவல் துறையினர் வந்தனர் என்றால் சரிதான். அமிர்தராஜின் தம்பி பார்த்தீப ராஜ் ½ மணி நேரத்தில் அங்கு வந்தாரா என்றால் நான் அவரை பார்க்கவில்லை. காவல் துறையினர் வந்து ½ மணி நேரத்தில் அமிர்தராஜின் சடலத்தை எடுத்துச்

சென்றார்கள் என்றால் சரிதான். நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அன்று என்ன நடந்தது என்று என்னை கேட்டு விசாரித் -தனர் என்றால் சரிதான். அதன் பிறகு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நடந்தாக சொல்படும் நாளில் நானும் செல்வகணபதியும் அமர்ந்து இருந்தாக சொல்லப்படும் குடில் சமையல் அறைக்கு இடது பக்கம் உள்ள குடில் என்றால் சரிதான். இடது பக்கம் தொடர்ச்சியாக 04 குடில்கள் இருக்குமா என்றால் இருக்கும். வெட்டுப்பட்டு இறந்த நபர் நாங்கள் அமர்ந்து இருந்த குடிலுக்கு அருகில் இருந்து சமையல் அறை நோக்கி ஓடிவந்தாரா என்றால் ஆமாம். நாங்கள் பார்ப்பதற்குமுன் அவருக்கு ஏற்பட்டு இருந்த காயங்கள் எப்படி ஏற்பட்டன என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் பார்த்தபோது வெட்டியர்கள் அனைவரும் முகமூடி அணிந்திருந்தனர் என்றால் சரிதான். Car தாபாவில் இருந்து வலது பக்கம் திரும்பியதா இடது பக்கம் திரும்பியதா என்றால் வலது பக்கம் திரும்பியது. வெட்டிய 06 நபர்களை நான் ஏற்கனவே பார்த்தது இல்லை. அதன்பிறகும் பார்த்தது இல்லை. காவல் துறையினர் என்னை விசாரித்தபோது வந்தவர்கள் என்ன ஆடை அணிந்திருந்தனர் என்றோ அவர்களின் உடல்வாகு, நிறம் குறித்தோ வயது குறித்தோ நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் Car-ல் ஏறி சென்றுவிட்டனர் என்றால் சரிதான். அந்த Car-ன் பதிவு எண்ணை நான் காவல் துறையினர் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான்.

காவல் துறையினர் என்னை விசாரித்தபோது குடிலில் இருந்து ஒருவர் ஓடிவந்ததாகவும் அவரை 06 நபர்கள் துரத்தியபடி வெட்டியதாகவும் வெட்டுப்பட்ட நபர் சமையல் அறை படிகட்டுமுன் சரிந்து விழுந்ததாகவும் நான் காவல் துறையினர் விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரிதான். Maruti Car பற்றியும் சொன்னேன் என்றால் சரிதான். 06 நபர்கள் வெட்டுப் -பட்ட ஆளை வெட்டியபோது நாங்கள் சுமார் 50 அடி தூரத்தில் நின்றிருப் -போமா என்றால் நின்றிருப்போம். சம்பவம் நடந்தபின் வந்த ஒருவர் தாபாவிற்கு வெளியில் இருந்து வந்தார் என்றால் சரிதான்.

செல்வகணபதி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கரட்டூர். எடப்பாடி கரட்டூர். அந்த ஊர் மேட்டூரில் இருந்து சுமார் 40 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். செல்வகணபதி எனக்கு உறவுக்காரர் இல்லை. அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றும் உறவினர் இல்லை என்று நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் மேட்டூரில் வசிப்பதால் இந்துஸ்தான் தாபா உள்ள இடமும் அதன் சுற்றுவட்டாரங்களும் எனக்கு பரிட்சியமான இடம் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் கைதுச் செய்யப்பட்டதாக செய்தித்தாளில் செய்தி வந்தது என்றால் சரிதான். சிறைச்சாலைக்கு செல்வதற்குமுன் செய்தித்தாளில் எதிரிகளின் நிழற்படத்தை பார்த்தேன் என்றால் இல்லை. அடையாளம் காட்ட சென்றபோது நானும் செல்வகணபதியும் சிறைச்சாலைக்கு ஒன்றாக சென்றோம் என்றால் சரிதான். சிறைச்சாலைக்கு செல்வதற்குமுன் மேட்டூர் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு அவர்கள்தான் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர் என்றால் சரிதான். 03 முறையும் அதே 03 நபர்களைதான் அடையாளம் காட்டினேன் என்றால்

சரிதான். தற்போது நீதிமன்றத்தில் தோன்றியுள்ள மூவர் அங்கு இல்லை என்றால் சரிதான். ஸ்டாலின் ஜெயக்குமார் சம்பவ இடத்தில் இருந்ததாக காவல் துறையினர் என்னை விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரிதான். காவல் துறையினர் என்னை விசாரித்தபோது என்னென்ன சங்கதிகளை சொன்னேனோ அதே சங்கதிகளைதான் நீதித்துறை நடுவரிடமும் சொன்னேனா என்றால் ஆமாம்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இல்லை என்றும் சம்பவத்தைபற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் அங்குதான் இருந்தேன். இறந்துபோன அமிர்தராஜ் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் காவல் துறையினர் என்னை இந்த வழக்கிற்கு ஒரு சான்றாளராக புனைந்து உருவாக்கியுள்ளனர் என்றால் சரியல்ல. என்னுடைய தாய்மாமன் வெங்கடாசலத்தின் மகன்தான் அமிர்தராஜ் என்றால் அவர் எனக்கு உறவினரா என்று எனக்குத் தெரியாது. காவல் துறையினர் சொல்லிக் கொடுத்து நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.